**செய்தி வெளியீடு எண்: 103** **நாள் : 11.03.2015**

# பத்திரிக்கைச் செய்தி

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 2012–2013ம் ஆண்டில் ஏற்பட்ட முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்/ உடற்கல்வி இயக்குநர் நிலை I காலிப்பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேல் நிலைப்பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 33 முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்/ உடற்கல்வி இயக்குநர் நிலை I ஆசிரியர்களுக்கு மட்டும் பணிநியமனக் கலந்தாய்வு.**

ஆதிதிராவிடர் நலத்துறையின்கீழ் இயங்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்டு ஆதிதிராவிடர் நலத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட **33** முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள்/ உடற்கல்வி இயக்குநர் நிலை I–க்கு மட்டும் எதிர்வரும் **16.03.2015** அன்று முற்பகல் **10.00** மணிக்கு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகம், எழிலகம் இணைப்பு, சேப்பாக்கம், சென்னை.**5** என்ற முகவரியில் இயக்குநர் தலைமையில் பணி நியமனத்திற்கான கலந்தாய்வு நடைபெறும். மேற்கண்ட நாளில் உரிய சான்றுகளுடன் அழைப்பாணை அனுப்பப்பட்ட நபர்கள் மட்டும் ஆஜராகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/.சு.சிவசண்முகராஜா
ஆதிதிராவிடர் நல இயக்குநர்

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**